**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**OS.No :117/2024** நாள் 07.10.2025.

வாசா.1, திரு.சுப்புலட்சுமி

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் எம்.ஏ, பி.எட் வரை படித்துள்ளேன். எனக்கு வயது தற்போது 63. 1997ம் ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது. என் அப்பா, அம்மா உயிரோடு இந்த காலத்திலேயே என்னுடைய சகோதர , சகோதரிகள் மற்றும் எனக்கும் திருமணம் ஆகிவிட்டது. என் தகப்பனாருக்கு சொந்த ஊர் திருவேங்கடம் வட்டம், விஜயரெங்கபுரம். என் தாயாருக்கு சொந்த ஊர் எஸ்.மேலாண்மறைநாடு. என் தாத்தா பெயர் குருசாமி நாயக்கர். என் தாத்தாவுக்கு வீராச்சாமியும் மற்றும் என் தகப்பனார் லோகநாதனும் வாரிசுகள். பிராது 1, 2 அயிட்ட சொத்துக்கள் என் தாயார் ராமம்மாளுக்கு பாத்தியப்பட்டது. பிராது 3, 4 அயிட்ட சொத்துக்கள் நாரணம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அந்த நாரணம்மாளின் கணவர் பெயர ரெங்கசாமி. என் தகப்பனாரின் சித்தி தான் நாரணம்மாள். நாரணம்மாளுக்கு உடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. நாரணம்மாள் ரெங்கசாமி உயிரோடு இருந்த காலத்திலேயே பிராது 3, 4 அயிட்ட சொத்துக்களை அவர்கள் தான் பராமரித்து வந்தார்கள் என்றால் சரிதான். பிராது 3, 4 அயிட்ட சொத்துக்கள் மானாவரி புஞ்சை நிலம் ஆகும். நாரணம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், ராமம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் , என்தாத்தா குருசாமி க்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் என் அப்பாவும் அவரது சகோதரருமான வீராச்சாமியும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு பாகம் பிரித்து கொண்டதில் தான் பிராது 1 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவின் பாகத்திற்கு கிடைத்ததாக சொல்கிறேன். 1991ம் ஆண்டு தான் சொத்துக்களை என் அப்பாவும் அவரது சகோதரருமான வீராச்சாமியும் பாகம் பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் இந்த வழக்கிடை 1 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவுக்கு தனித்து ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களுக்கு என் அப்பா பெயருக்குபட்டா ஏற்பட்டு அவர் தான் தீர்வை வகைகளை செலுத்தி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு என் அப்பா அனுபவித்து வந்த நிலையில் பெண் மக்களாகிய நாங்கள் எங்களுக்கு திருமணம் ஆகி அவரவர்கள் அவரவர்களுடைய கணவர் வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். 1ம் எதிர்வாதி மட்டுமே விஜயரெங்கபுரம் ஊரில் வசித்து வருகிறார். மற்ற சகோதர சகோதரிகளும் நாங்களும் வெவ்வேறு ஊர்களில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தாயார் 2016ம் ஆண்டு இறந்துபோனார். என் தகப்பனார் 2022ம் ஆண்டு இறந்துபோனார். என் தகப்பனார் விஜயரெங்கபுரத்தில் வைத்து தான் இறந்தார். என் தகப்பனார் 1ம் எதிர்வாதி குடியிருந்த வீட்டில் வைத்து தான் இறந்துபோனார் என்றால் சரிதான். என் தாயார் இறந்த பிறகு பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்து தர வேண்டி நான் யாரிடமும் கேட்கவில்லை என்றால் சரிதான். பிராது 4ம் அயிட்ட சொத்தானதை என் தகப்பனார் 1ம் எதிர்வாதிக்கு பதிவு செய்யப்பட்ட

தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் எடுத்து படித்து பார்த்தேன். 4ம் அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் எதிர்வாதி பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் என் அப்பா எழுதிக்கொடுப்பதற்கு முன்பாக அந்த சொத்திற்குரிய வருவாய் துறை ஆவணங்கள் அனைத்து என்அப்பா பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியான என் சகோதரர் ராஜ்நாராயாணன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ராஜ்நாராயாணன் என்பவர் சங்கரன்கோவில் வட்டம் வெள்ளாபுரம் உமையன்தலைவன்பட்டியில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அதில் 2வதுசாட்சியாக கையொப்பம் செய்துள்ள சங்கர நாராயணன் யார் என்று எனக்கு தெரியாது. 03.01.2022ம் தேதியில் என் தகப்பனார் 1ம் எதிர்வாதிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தது பற்றி எங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். பிராது 7ம் அயிட்ட சொத்தான அந்த வீட்டில் தான் 1ம் எதிர்வாதி குடியிருந்து வந்தாரா என்று கேட்டால் இல்லை. என் தகப்பனார் இறக்கும் போது பிராது 7ம் அயிட்ட சொத்து வீட்டில் வைத்து தான் இறந்துபோனார் என்றால் சரிதான்.அப்போது 1ம்எதிர்வாதி உடனிருந்தார் என்றால் சரிதான். பிராது 4, 7 அயிட்ட சொத்துக்களை தவிர மீதமுள்ள சொத்துக்களை 2, 3 எதிர்வாதிகள் தான் அனுபவித்து வந்தார்கள் என்றால் அப்படியில்லை நாங்கள் அனைவருமாக பொதுவில் வைத்து தான் அனுபவித்து வந்தோம். பிராது 4 மற்றும் 7 அயிட்ட சொத்துக்கு 1ம் எதிர்வாதி பெயரில் தான் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் அவர் தற்பொழுது தான் வாங்கியுள்ளார். அவர் பட்டா வாங்கிய விபரம் எனக்கும் , 2, 3 எதிர்வாதிகளுக்கும் தெரியும். 3ம் எதிர்வாதி உடனிருந்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி முடித்த பின்பு அந்த ஆவணத்தின் நகலை எடுத்து என்னிடம் கொடுத்தார் என்றால் ஆமாம். என் தகப்பனார் பிராது 2, 3 அயிட்ட சொத்துக்களை மற்ற எதிர்வாதிகளுக்கு கொடுத்ததால் தா்ன பிராது 1, 4 அயிட்ட சொத்துக்களை வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதிக்கு என் தகப்பனார் கொடுத்தார் என்று சொன்னால் அப்படியில்லை. என் னுடைய திருமணத்தை அனைவருமாக சேர்ந்து தான் நடத்தி வைத்தார்கள் என்றால் என் அப்பா , அம்மா மட்டுமே இருந்துநடத்தி வைத்தார்கள். திருமணத்தில் அனைவரும் கலந்து கொண்டார்கள். என் குழந்தைகள் யாருக்கும் திருமணம் ஆகவில்லை. வழக்கில் உள்ள 2ம் வாதியான என் சகோதரி சுலோக்சனாவின் மூத்த மகனுக்கு மட்டுமே திருமணம் ஆகியுள்ளது. 1ம் எதிர்வாதிக்கு இரண்டு முறை இருதய அறுவைசிக்சை நடந்துள்ளது என்றால் ஆமாம். அதில் ஏற்பட்ட கடனுக்காக தான் 1ம் எதிர்வாதியானவர் பிராது 4ம் அயிட்ட சொத்தை 4ம் எதிர்வாதிக்கு கிரையமாக செய்து கொடுத்துள்ளார் என்றால் அப்படியில்லை. 1ம் எதிர்வாதியானவர் ஊரில் விவசாயம் பார்த்து வருகிறார். அவர் வேறு எந்த வேலைக்கும் செல்லவில்லை. 4ம் எதிர்வாதியான ரம்யா என்பவரை நான் நேரடியாக பார்த்ததில்லை. பிராது 4ம் அயிட்ட சொத்தை நான் நேரடியாக பார்த்துள்ளேன். 4ம்அயிட்ட சொத்துக்கு

பக்கத்தில் கல்குவாரி உள்ளது. அந்த கல்குவாரி 10, 20 ஏக்கரில் இருக்கும் என்றால் எனக்கு எவ்வளவு பரப்பளவில் உள்ளது என்று தெரியாது. அந்த கல்குவாரியானது 4ம் எதிர்வாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லிக்கொண்டார்கள். பிராது 4ம் அயிட்ட சொத்திற்கு அருகில் அந்த கல்குவாரி இருப்பதாலும் 1ம் எதிர்வாதிக்கு இருதய அறுவைசிக்சைக்காக ஏற்பட்ட கடன்களை நிவர்த்தி செய்துகொள்ளவும்பிராது 4ம் அயிட்ட சொத்தானதை 1ம் எதிர்வாதியானவர் 4ம் எதிர்வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அப்படியில்லை. ஒரு சில சொத்துக்களை பொறுத்துஎன் தாத்தாவும் என் அப்பாவும் என் பெரியப்பாவும் சேர்ந்து வெளி நபருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த பணத்தை வைத்துதான் எனக்கு என் சகோதரிகளுக்கும் சீர்வரிசைகளை செய்தார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. பிராது 3, 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து என் தாத்தா குருசாமியும் பாட்டி நாரணம்மாளும் சேர்ந்து என் தகப்பனாருக்கு எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாரணம்மாள், ரெங்கசாமி நாயக்கருக்கு வாரிசுகள் இல்லை என்பதால் தான் குருசாமி நாயக்கர் வாரிசுகள் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அது சரிதான். என்தகப்பனார் இறந்த பிறகு ஏற்கனவே பிராது 4வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் எதிர்வாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக கொடுக்கப்பட்டதை பாகத்தில் ஒதுக்கியும் பிராது 7ம் அயிட்ட சொத்தானதை 1ம் எதிர்வாதிக்கு வாய்மொழியாக ஒதுக்கியும் இதர சொத்துக்களை 2, 3 எதிர்வா்திகள் பாகமாக ஒதுக்கிக்கொண்டார்கள் என்றால் அது சரியல்ல. பிராது 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் நாரணம்மாள், ராமரம்மாள் ஆகியோர்கள் பெயரில் தான் பட்டாக்கள் இருந்து வருகிறது என்றால் சரிதான். நாரணம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதால் அந்த சொத்தானது என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் அது சரியல்ல. வழக்கை நான் தாக்கல் செய்து கொள்ளவதற்கு முன்பாக எதிர்வாதிகளுக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியிருந்தேன். அந்த அறிவிப்பிற்கு பிறகு பெரியோர்களை வைத்து சொத்துக்களை பொறுத்து பஞ்சாயத்து நடைபெற்றதா என்று கேட்டால் பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறு பஞ்சாயத்து ஏற்பட்டது என்றும் அந்த பஞ்சாயத்தில் பிராது 4, 7 அயிட்ட சொத்துக்களை 1ம் எதிர்வாதி பாகத்திற்கு ஒதுக்கவும் மற்ற சொத்துக்களை நாங்கள் பாகம் செய்து கொள்ளவும் என்று பேசப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிர்வாதியானவர் 4ம் எதிர்வாதிக்கு பிராது 4ம் அயிட்ட சொத்தை பொறுத்து 01.02.2024ம் ஆண்டு கிரைய பத்திரம் எழுதிய விபரம் எனக்கு தெரியும். அந்த பத்திரத்தின் நகலை நான் எப்போது எடுத்தேன் என்று எனக்கு தெரியாது. 1991ம் ஆண்டுக்கான பாக பத்திரம், 2022ம் ஆண்டிற்கான தான செட்டில்மெண்ட் பத்திரம், 2024ம் ஆண்டிற்கான கிரைய பத்திர நகலை ராஜ்நாராயாணன் தான் எடுத்துக்கொடுத்தார் என்று சொன்னால் அப்படியிலலை. வழக்கின் 3ம் வாதியான ராஜகுரு தான் எடுத்துக்கொடுத்தார். எனக்கும், 2, 3 எதிர்வாதிகளுக்கும் இடையில் நல்ல பேச்சு வார்த்தை உள்ளது. 1ம் எதிர்வாதி

கனகராஜ் யாரிடமும் பேசிக்கொள்வதில்லை. ஏன் அவரை ஒதுக்கினோம் என்று கேட்டால் அவராகவே ஒதுங்கிக்கொண்டார். அவர் இரண்டு முறை இருதய அறுவைசிக்சை செய்த பின்பும் நாங்கள் போய் அவரை பார்த்தோம். பிராது சொத்துக்கள் கூட்டு அனுபவித்தில் உள்ளது என்பதை காண்பிக்ககூடிய வருவாய் துறை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 3, 4 அயிட்ட சொத்துக்கள் என் அப்பா லோகநாதனுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதனை அவர் 1ம் எதிர்வாதிக்கு எழுதிக்கொடுக்க உரிமை உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 1991ம் ஆண்டுக்கான பாக பத்திரத்தின் அசல் வழக்கின் 3ம் வாதியான ராஜகுரு வசம் உள்ளது. பிராது 4ம் அயிட்ட சொத்தானது என் தகப்பனாருக்கு அவரது தகப்பனார் வழியாக வந்த சொத்து அல்ல என்பதால் அதனை ஆட்சேபிக்கும் உரிமை எனக்கு இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. பிராது சொத்துக்களை பொறுத்து 4ம்அயிட்ட சொத்தை தவிர இதர சொத்துக்கள் அனைத்தையும் மற்ற ஆண்மக்கள் அனைவரும் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றும் எனவே பிராது சொத்துக்கள் பெயரில் நாங்கள் பாகம் கோரமுடியாது என்றால் அதுசரியல்ல. நாங்கள் அனைவருமாக சேர்ந்து 1ம் எதிர்வாதியை கஷ்ட நஷ்ட படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் பாக வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. எனவே என் தகப்பனார் 1ம் எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்ஆவணத்தை பற்றியோ, 1ம் எதிர்வாதியானவர் 4ம் எதிர்வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தைப்பற்றியோ ஆட்சேபிக்கும் உரிமை எங்களுக்கு இல்லை என்றால் அது சரியல்ல. எங்களுக்கு வழக்கில் கோரிய பரிகாரம் கிடைக்கக்கூடியவை அல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 07th day of October 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.